முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத்திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற கலை – அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்களில் வென்ற 1425 பேருக்கு சென்னை பல்கலைக்கழகத்தில் பணி நியமன கடிதங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரையாற்றினார்.

பேரறிஞர் அண்ணா சதுக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா நினைவுப் பேருந்து நிலையம் மத்திய சென்னை எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.20 கோடி மதிப்பில் கட்டப்பட்டதை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நே.சிற்றரசு உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

வேளச்சேரி நீச்சல் குளம் வளாகத்தில் தரம் உயர்த்தப்பட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் மற்றும் கூடுதல் மேம்பாட்டு வசதிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.06. 2023) திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து நடைபெற்ற ஜிம்னாஸ்டிக்ஸ் மாணவ, மாணவியர்களின் சாகச நிகழ்ச்சிகளை அமைச்சர் பெருமக்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கண்டுகளித்தனர். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் மா. சுப்பிரமணியன், எஸ்.அரவிந்த்ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மண்டல குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தென் கொரியாவின் யெச்சியோனில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான 20 ஆவது ஆசிய தடகளப்போட்டிகளில், இந்தியா சார்பில் பங்கேற்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கல பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கனிஸ்தா டீனா, சரண் மேகவர்ணம், அக்ஷயா, அபிநயா ஆகியோர் நேற்று தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.

தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் 2023 போட்டிகளில்

பதக்கங்கள் வென்ற 4 தடகள வீரர்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஜூன் 11

தென்கொரியாவில் 2023 ஜூன் 4ந் தேதி முதல் 7 ந்தேதி வரை 20 வயதுக்கு உட்பட்டோருக்கான "ஆசிய தடகள சாம்பியன்ஷிப் - 2023" போட்டிகள் நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் இந்திய தடகள வீரர்கள் 19 பதக்கங்கள் வென்றனர்.

இதில் இந்தியா சார்பில் கலந்து கொண்ட தமிழ் நாட்டை சார்ந்த 4 தடகள வீரர்கள் பதக்கங்கள் வென்று சாதனை படைத்தனர். 4 × 400 மீ தொடர் ஓட்டத்தில் எம்.கனிஸ்டா டீனா (பெண்கள் பிரிவு) தங்கப்பதக்கமும், எம். சரண் மேகவர்ணம் (ஆண்கள் பிரிவு) வெள்ளிப் பதக்கமும், 4×100மீ தொடர் ஓட்டத்தில் (பெண்கள் பிரிவு) ஆர். அபிநயா மற்றும் எஸ். அக்சயா ஆகியோர் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

இந்திய சார்பாக பங்கேற்று பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த 4 தடகள வீரர்களும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.06.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் லதா மற்றும் பயிற்சியாளர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சரின் தொடர் நடவடிக்கையால் தமிழ்நாட்டிற்கு வரும்

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு!

தென்காசியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

தென்காசி, ஜூன்.11-

தென்காசி மாவட்டத்தில் சுற்றுலா தல மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளபட வேண்டிய வளர்ச்சி பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சுற்றுலா தல மேம்பாட்டு திட்டத்தின் கிழ் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தென்னிந்தியாவின் "ஸ்பா" என்று அழைக்கப்படும் தென்காசி மாவட்டம்,குற்றாலம் அருவிப் பகுதிகளைமேம்படுத்த ரூ.15.00 கோடியில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று 2022 2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகளில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்திருந்தார்.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி மற்றும் உணவகம், படகு குழாம் ஆகிய பகுதிகளை ஆய்வு செய்தார். குற்றாலத்தில் உள்ள பழைய குற்றாலம், பிரதானஅருவி, ஐந்தருவி மற்றும் புலி அருவி ஆகிய பகுதிகளில் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள திட்டப்பணிகளை ஆய்வு செய்தார். குற்றாலத்தில் சுற்றுலா தல மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட உள்ள திட்டப்பணிகளை ஆய்வு செய்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தாவது,

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023 இல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் மட்டும் 2,67,773 ஆக உயர்நதுள்ளது. இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021இல் 11,53,36,719 ஆக இருந்து 2022இல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023இல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் 6,64,90,154 என உயர்ந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை கொடைக்கானல், உதகமண்டலம், பைக்காரா, ஏற்காடு, முட்டுக்காடு, முதலியார் குப்பம், பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

தற்போது பிரதான அருவிப்பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் துவங்கப்பட உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் உடை மாற்றும் அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை, தோரணவாயில் புதுபித்தல், பாதை சீரமைத்தல், சிறுவர் பூங்கா மேம்பாடு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. விரைவில் மற்றபகுதிகளிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுற்றுலாபயணிகள் பயன்பெறுவார்கள். குண்டாறு அணைக் கட்டுப் பகுதியில் சுற்றுலாத்துறையின் சார்பாக படகு போக்குவரத்து மற்றும் சாகச சுற்றுலா நடத்துவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழினத் தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா!

சென்னை ராமகிருஷ்ணா மாணவர் இல்லத்தில் உணவு வழங்கல்!

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் வழங்கினார்!

சென்னை, ஜூன் 11-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவு சார்பில் சென்னை ராமகிருஷ்ணா மிஷன் மாணவர்கள் இல்லத்தில் அறுசுவை உணவு வழங்கும் விழா. மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

சிறுபான்மையின மக்களின் முகவரியாக திகழும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராய் சமூக நீதி காக்கும் கழகத்தையும், 5 முறை முதலமைச்சராய் நவீன தமிழ்நாட்டையும் கட்டமைத்து, தனது வாழ்நாளெல்லாம் உலகத்தமிழர்களுக்காக உழைத்து அவர்தம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை சிறப்பிக்கும் நிகழ்வாக, கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில், சென்னை மயிலாப்பூரில் அமைந்துள்ள ராமகிருஷ்ணா மிஷன் மாணவர்கள் இல்லத்தில் இனிப்புகளுடன் கூடிய அறுசுவை மதிய உணவு வழங்கும் நிகழ்வு அதன் மாநில செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாநில துணைச் செயலாளர்கள் ரபி அஹமது, சாகுல் அமீது, தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஜெகன்ராஜ் மற்றும் தி.மு.கழகத்தினர் பங்கேற்று சிறப்பித்தனர்.

பள்ளிகள் தாமதமாக திறப்பதால் சனிக்கிழமைகளிலும் வகுப்புகள் நடத்தப்படும்!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஜூன் 11

பள்ளிகள் தாமதமாக திறக்கப்படுவதால் சனிக்கிழமைகளிலும் வகுப்புகளை நடத்தத்திட்டமிட்டிருப்பதாக அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் மே மாத கோடை விடுமுறை முடிந்த பிறகு ஜூன் 1-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் வெயில் சுட்டெரித்த தால் இதைத் தள்ளி வைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர்.

இதையேற்று ஜூன் 7-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்தார். அதன் பிறகும் வெயில் நீடித்தது.

இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தி புதிய அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி 6 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 12-ஆம் தேதியும், 1 முதல் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூன் 14-ஆம் தேதியும் பள்ளிகள் திறக்கப்படும் என அமைச்சர் அறிவித்தார்.

ஆகவே விரைவில் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. ஆனால்

அதிக விடுமுறை விடப்பட்டதால் பாடங்களை முடிக்க போதிய அவகாசம் இருக்காது. ஆகவே சனிக்கிழமைகளிலும் வகுப்புகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறியதாவது:-

பள்ளி மாணவர்களுக்கான தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டியில் தமிழக மாணவர்கள் கலந்து கொள்ளாதது தவறுதான். அந்த தவறை ஒப்புக்கொள்கிறோம். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாததன் காரணமாகவே மாணவர்கள் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளாத சூழல் உருவாகி உள்ளது.

தவறு செய்த உடற்கல்வியல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இணை இயக்குநர் ஒருவருக்கும், அது சார்ந்த விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் நடைபெற உள்ள தேசிய அளவிலான பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு போட்டியில் தமிழக மாணவர்கள் நிச்சயம் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் தாமதமாக திறக்கப்படுவதால் வரும் கல்வி ஆண்டில் ஒரு பாடத்திற்கு நான்கு மணி நேர பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. பாட வகுப்புகள் நடத்துவதற்கான பற்றாக்குறையை போக்குவதற்கு சனிக்கிழமைகளில் பாடவகுப்புகள் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

மாணவர்களுக்கு பாடச்சுமைகள் இல்லாதவாறும், ஆசிரியர்களுக்கு பயிற்சியில் பாதிப்பு ஏற்படாத வாறும் மாணவர்களுக்கு சனிக்கிழமை வகுப்புகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

கோ.தளபதி – பி.வாசு பங்கேற்பு!

மதுரையில் முதல்வருக்கு நன்றி சொல்லும் மாநாடு!

கோவில் பூசாரிகள் நலச்சங்கம் ஏற்பாடு!

மதுரை, ஜூன்.11-

பூசாரிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகின்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் மாநாடு மதுரையில் நாளை காலை 11.00 மணியளவில் கோவில் பூசாரிகள் நலச் சங்கம் சார்பில் புதூர் மார்க்கெட் பத்மா ஆர்யா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., நலச்சங்க மாநிலத் தலைவர் பி.வாசு மற்றும் எஸ். சங்கர், கே.சுந்தரம், டி.கணேசன், இ.பி.பத்மநாபன், ஆர். சண்முகசுந்தரம், ஆர்.முருகன், பி.தங்கபாண்டியன், கே.எல். குமார், எஸ்.ராஜசேகரன், சவரிராயன், ஏ.வேலு, டி. சீனிவாசன், பழ.கருப்பையா, பாஸ்கரசேதுபதி உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.